**Subscription.**

Inland: Rs. 100/- year
For Advertisement
Apply to:
The Manager,
'The Morning Star,'
182, First Cross Street
JAFFNA.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka
under No. Q / J / 104 / News / 89

Established : 1841 : A Christian Weekly: Published Every Friday

Vol:- 150 Jaffna, Friday 19&26 January 1990 No:- 3&4

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

News and Articles in Tamil and English. Please send them to

THE EDITOR,
'The Morning Star,'
182, First Cross Street,
JAFFNA.

## News from Vancouver B. C. CANADA

The first ever Tamil Carol Service was held on 23rd Dec. 1989 at Kerrisdale Community. Centre, Vancouver. The Nine Lessons and Carols were organised by the Eelam Tamil Association of British Columbia The main feature of the day was the singing of carols by the Multi Religious Choir. The proceedings were conducted by Mrs. Gnani Nalliah (Retired Teacher Chunduknli Girls College) and she gave the Christmas message. Special children songs were sung by the Nalliah sisters and Aruliah brothers. Tamil song was sung by Dharini and Devaki Balachandran (Great Grand children of the Rev. E. K. Yesuthason). After the service Santa distributed presents to the children. The function came to an end with a sumptious food served by the ladies section of E.T.A.

Readers are informed that ETA the only Tamil organisation in British Columbia promotes the public awareness of the problems facing the Tamil Community in Sri Lanka. Organisation also encourages all the Religious and Cultural activities amongst the Tamils in B.C.

C.T. Premarajah

## Uduvil

The Uduvil Day Care Centre, in the Uduvil Church premises, celebrated Christmas on 8-12-89. The Chief Guest was Mrs. S. Somasundaram, former principal, Uduvil Girls' College.

The programme commenced at 2-00 p.m. with Drill Displays, folk dances, action songs etc. There was much excitement when Santa claus arrived some children even taking cover under chairs and tables and behind walls. Gifts were distributed to the children, to the teachers and helpers.

Mrs. A. R. Thambiappah the Secretary of the Diocesan Women's Fellowship which runs the Centre, thanked the Chief Guest and all those who helped to make the function a success. She also outlined the programme the Jaffna Diocese of the C.S.I. was miplementing to help the poorest of the poor in this part of the Island.

## UDUVIL Y. M. C. A.

The Worship Service in connection with the YMCA week of prayer was held on the 10th of December at the Uduvil Church. Mrs. S. Somasundaram led the Service. A Thevaram was sung by S. Antony, a seminary student. The Lessons were read by messrs V. Spenser and B. Jeyarajah the Treasurer. It being the Bible Society Sunday, Mrs. A. R. Thambiappah gave a brief talk on the Bible Society and its ministry in the life of the Church. Mr. T. A. Thambiappah traced briefly the history of the Uduvil YMCA and referred particularly to those who had laboured in the past to make the Uduvil YMCA a living institution—The Secretary, Mr. Kokulathasan led the Litany.

## Colombo Church—Parsonage and Parish Hall Block

Saturday, 20th January was yet another historic day for the Colombo Church of the J.D. C.S.I. when the new Parsonage and Parish Hall Block - a three storey structure, was dedicated by the Rt. Rev. D J. Ambalavanar at 4.30 p.m. There were present a large gathering of members, friends and well wishers. The opening and dedication took the form of a simple and solemn service following the C. S. I. Prayer Book. Mrs. J. J. Ratnarajah the wife of a former Pastor of the Parish, the late Rev. J. J. Ratnarajah read the lesson. The service was followed by a Fellowship Tea at the New Parish Hall on the second floor and a public meeting. The meeting was chaired by Mr. C. D, Chinnakone who served as the Chairman of the Building Committee. It began with prayer by the Revd. Canon James Ratnanayagam, Vicar of a neighbouring Anglican Parish-Holy Trinity Church. The Chairman welcomed the gathering and thanked the guests for sharing in the joy of the congregation Dr. Mrs. Mahes Arulchelvam spoke on behalf of the congregation and Mrs. Vasanthy Rajaratnam, the Secretary of the Church gave a brief outline of the history of the block and the wonderful way in which God had enabled the congregation to raise the necessary funds. She thanked the members of the congregation both within and outside the country who had contributed liberally.

The Bishop congratulated the congregation for its faith and determination which enabled the completion of this work. He expressed his gratitude to three Mission organisations which had also contributed towards the Church and Parsonage Project. The United Church Board for World Ministries New York, the Council for World Mission - London and the Evangelisches Mission Board for South Germany - Stuttgart. All these Boards responded to the CSI Synod's request to help the Colombo Church.

The Church Committee had arranged to honour the former Pastors and the Bishops who served the congregations by unveiling their photographs in the Parish Hall. Photographs of the Revds. G. M. Kanagaratnam, K. S Jeyasingham, J. J. Ratnarajah K. J. Mills, D. R. Ambalavanar and S. S. Arulampalam & Bishops Kulandran and Ambalavanar were unveiled.

A special song composed for the occasion by Mr. A. Ramanathan was sung by two members and the Sunday School and Choir also rendered special songs. The Youth Fellowship staged a short drama "Crucifying Jesus."

The Pastor of the Church the Rev. T. S. Premarajah who proposed a vote of thanks said that this day was in a way the culmination of the visions of the pioneers who dreamed of an organised congregation of the C. S. I. in the early forties. Mr. S. J, V. Chelvanayagam, Dr. S. L, Navaratnam and Mr. P. E. Rajaratnam were in the first Church Committee and it was Dr. S. L. Navaratnam's gift of a piece of land in Colombo that enabled the congregation to start the long process of finding a house for the Pastor and later plan on his new Church and Parsonage complex.

## EXTRACTS FROM FR. RECTOR'S REPORT FOR THE ACADEMIC YEAR 1988 — 1989.

The year under review, October 1988 to September 1989, opened with a concelebrated Eucharist presided over by His Lordship Rt. Rev. Dr. B. Deogupillai on the 3rd of October 1988. It was preceded by the annual retreat preached by His Lordship Rt. Rev. Dr. Tom Saundranayagam of Mannar. Inspite of the deteriorating situation in the Country-politically socially and economically - and the consequent killings day in and day out in different parts of the country, the Seminary was able to survive, thank God, in carrying out its annual programme of work with great satisfaction. It was only at the very end of the year, we were disturbed and harassed by the arrest, torture and detention of seven of our students who were subsequently released when proved innocent. The agony lasted four days for the Community and still more forthose directly affected. We started the year with sixty-seven students from the three Dioceses of Jaffna, Manar and Trinco-Batticaloa, the pre Novitiate of the Oblates and the Institute of Voluntas Dei,

With "Formation of Priests" as the Theme for the next Bishops' Synod of Rome in October 1990, the Universal Church has invited all those concerned with Seminaries to reflect deeply and more concretely on Priestly Formation 'in circumstances of the present day'. Pope John Paul calling for "a restructuring of the life of seminaries" has spelt out his conviction. "It is necessary today to make every effort possible to form new generation of Candidates for the Priesthood, future priests, by giving them an *authentic Gospel spirit and a capability of reading the signs of the times.....*". Hence our disciplinary and academic effort are sub-ordinated to the spiritual effort of *capturing the spirit of the Gospel for our time and situation*.

We are aspiring to make our students "capable of reading the signs of the times" and of giving the needed response in the spirit of the Gospel. We are happy to place on record that in 1989 eleven deacons from our Seminary are ordained to the priestly ministry and fifteen students receive the ministries of lectorate and acolyte.

With the aim of guaranteeing orthodoxy and high standard in the sciences of philosophy and theology and for facilitating priest - stdents in their furtherance of studies in these fields, we have already made the application seeking affiliation with the faculties of Theology and philosophy of the pontifical Urban University in Rome. The Academic Staff both for theology and for philosophy is built up of a stable group of Ordinary Professors mostly resident in and around the Seminary, and of a larger group of visiting lecturers drawn out from various parts of the diocese. There are thirteen Ordinary Professors and twenty Visiting Lecturers with ten Doctorates and over twelve post - Graduate Degrees.

One of the agents of formation for the present day seminarian is his insertion into pastoral experience already during the period of formation. Besides the pastoral engagement during their major, Easter and Christmas holidays, students have regular insertion on Sunday afternoons.

The usual octave of prayer for unity in January was participated by the Staff and Students of the Christian Theol- College, Maruthanamadam.

(Continued on page 6)

# உதய தாரகை

UTHAYATHARAKAI
Estd. 1841.

மலர் 150 | 19 - 01 - 1990 | இதழ் 03

## சிந்தனை 47.

ஏசாயா 7; 8; அதிகாரங்கள்.

யூத வரலாறு அன்னிய அரசுகளால் அடக்கப்பட்டும், அடிக்கப்பட்டும் வளர்ந்து வந்த வரலாறு. இவ் வரலாற்றில் இருள் படர்ந்து ஒளி, மங்கிய திரியான போதெல்லாம், எண்ணெய் ஊற்றித் திரியை அணையாது பாதுகாத்தவர்கள், இறைவாக்குரைப்போரே! இவர்களுடைய அரும்பணியால் யூத மக்களின் அங்கலாய்ப்புக்களும், எதிர்பார்ப்புக்களும் நிறைவேற்றப்பட்டுக் கொண்டே இருந்தன. காரணம், இறைவாக்குரைப்போர் இறைத்திட்டம் அறிந்து செயல்பட்டார்கள். அரசியல் வாதிகளாக வாழ்ந்த அரசர்களும்," அதிகாரிகளும் சுய அறிவிலும், திட்டங்களிலும் நின்று செயல்பட்டார்கள்.

கி. மு. எட்டாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில், பல்வேறுபட்ட அன்னிய அரசுகளின் நெருக்குதலுக்குள் யூத மக்கள் தள்ளப்பட்டார்கள்." மனித பெலத்திற்கும், நிலைநிற்காத பொருளாதார வளத்திற்கும், முதலிடம் தந்தவர்கள் இறை ஆட்சிக்குத் தூரமாகப் போனதால் துன்பம் என்ற பெரும் காற்று எழுந்து இவர்களுடைய வரலாற்றின் அடித்தளத்தையே, அசைந்தது.

இக் காலகட்டத்தில் அரசர்களும், அதிகாரிகளும் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டும், பிரிக்கப்பட்டும் போவார்கள். சாதாரண மக்கள், துணையுமின்றி - அணைந்தும், இணைந்தும் வாழ வழியுமின்றி வாழ்வு யாரால் வரும் என்று கேள்வி எழுப்புவார்கள். இவர்களை எப்படித் திடப்படுத்திப் பெலப் படுத்துவது என்பதை, ஆளமாகச் சிந்தித்த இறைவாக்குனன் ஏசாயா, இறைத்திட்டத்தில் கண்டு அறிமுகம் செய்து வைத்த புனிதமான சொல் இம்மானுவேல் என்ற இறைவாமை பெற்ற சொல். மறையுண்மையின் மாட்சிமையைச் சுமந்து நிற்கும், சொல்லும் கூட.

புதிய வரலாற்றுக்குள், மக்களை அழைக்கும் சொல்லாகவும், அழைப்பை ஏற்க மறுப்பவர்கட்கு எச்சரிப்பின் சொல்லாகவும் இருப்பதை ஏசாயா 7-ம் 8-ம் அதிகாரங்கள் தொனி செய்து நிற்கின்றது.

எல்லாவற்றையும் இழந்து அகதிகளாக்கப்பட்டும், அனாதைகளாக்கப்பட்டும் அனர்த்தங்களுக்குள்ளாக்கப் பட்டும், இருப்பவர்கட்கு இம்மானுவேல் என்ற சொல் புதிய தெம்பைத் தருவதாகவும், எல்லாம் உடையவர்கட்கும் என்றும் வாழ்வு தம்முடையதே என்று இறுமாந்து இருப்பவர்கட்கும் ஏமாற்றத்துக்குரிய ஒன்றாகவும் இச் சொல் அமைந்துள்ளது என்பதை ஏசாயா 8:14 ஆம் வசனம் தொனி செய்து நிற்கின்றது.

புதிய வரலாற்று நாயகனாக வருபவர் முற்றும் புதியவராகவே வருவார் என்பதை இறைவாக்குனன் ஏசாயா கூறும்போது, தோன்றி மறையும் ஒருவராகவோ, புராண வரலாற்று நாயகனாகவோ இல்லாமல் ஊனுடல் தாங்கிய ஒருவராகவும், பெண்ணிடம் பிறப்பவராகவும் அறிமுகம் செய்து வைக்கின்றார்.

இவர் மக்களோடு மக்களுக்காக மக்களுக்கென்று வாழுபவர் என்பதைத் தொனி செய்கின்றார். இக் கருத்தைத் தன்னுள் மறைத்து வைத்திருப்பது, இம்மானுவேல் என்ற சொல்.

மக்களோடு, மக்களுக்காக மக்களுக்கென்று வாழும் தலைமைத்துவத்தை எதிர்பார்த்திருக்கும் மனங்களுக்கு, இச் சொல் புதிய தெம்பையும், திட நம்பிக்கையையும் தந்தது. இச் சொல் சரித்திர நிகழ்வுகளின் தாக்கங்களுக்கிடையே வளர்ந்து வந்து கிறிஸ்துவில் நிறைவேறியது என்பதை மத்தேயு 1:23 -ம் வசனம் தொனி செய்கின்றது.

இன்று மக்களாட்சியில் மக்களால் தெரிவு செய்யப்படும் தலைவர்கள் தலைவர்களானதும், மக்களோடு, மக்களுக்காக, மக்களுக்கென்று வாழ வேண்டியவர்கள் என்பதை மறந்து மக்களை விட்டு விலகி வாழ ஆரம்பித்து விடுவதால், மக்களின் தேவைகள், சுமைகள், விருப்பு வெறுப்புக்களை அறிய முடியாத தலைவர்கள் ஆகிவிடுவதால், மக்களின் அன்புக்குத் தூரமாகச் செல்லுபவர்கள் ஆகி விடுகின்றார்கள்.

இதன் காரணத்தால் தங்களைச் சுற்றிலும், பாதுகாவலைப் பலப்படுத்திக் கொள்ளும் அவசியம் ஏற்பட்டு விடுகின்றது. இந் நிலைப்பாடு இருளைப் பெருக்குமே அன்றி ஒளியைத் தரவல்லது அல்ல.

இருளகற்றி ஒளியைத் தர வந்த இம்மானுவேல் மக்களின் நண்பனாக மக்களுக்கென்று மக்களோடு, மக்களுக்காகவே வாழ்ந்தார். வாழ்ந்துகொண்டே இருக்கின்றார். இவரே மக்களாட்சியின் மகத்தான தலைவர். நம்மோடு இருப்பவர். நம்மோடு வாழ்ந்தவர். நமக்காய் மரித்தவர். நமக்காய் உயிர் பெற்றெழுந்தவர். இன்னும் நம்மோடு இருப்பவர் என்ற உணர்வுடன் திடங்கொண்டு முன்னோக்கிச் செல்வோம் வாரீர்!

ஆ. வே. இயேசுதாசன்.

## செய்திகள்:

### திருமணங்கள்

**1. 'உன் மகிழ்ச்சி நிறைவாய் இருப்பதற்கு...... அவர் அன்பில் நிலைத்திரு'**

**சத்தி — ருஷ்ஷிரா.**

புலோலியைச் சேர்ந்த திரு. J.V. குலசிங்கம் தம்பதிகளின் மகன், செல்வன் சத்தி அவர்களுக்கும் கொழும்பில் வசிக்கும் திரு. C. K. குணநாயகம் தம்பதிகளின் மகள், செல்வி ருஷ்ஷிரா அவர்களுக்கும் கடந்த டிசம்பர் மாதம் 29 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணியளவில், கொள்ளுப் பிட்டி மெதடிஸ்த தேவாலயத்தில் திருமணம் நிறைவேறியது மணமகள், காலஞ்சென்ற திரு.I.P.துரைரத்னம், திருமதி துரைரத்னம் அவர்களின் பேரப்பிள்ளையாவார். வண. H. R. ஜெயச்சந்திரன் திருமண ஆராதனையை நடத்தினார். திரு. சூரி உவில்யம்ஸ் மணமக்களுக்கு அறிவுரை வழங்கினார். ஓட்டல் தப்பிரபேனில் அனைவருக்கும் விருந்துபசரணை நடைபெற்றது.

**2. 'இறைவன் எங்களுடன் இணைந்து வாழ்கிறார், அவர் அன்பு எங்களில் நிறைவாக்கப்படுகிறது'**

**செல்வ சீலன் — சலோமி.**

செல்வன் ஜோசெப் செல்வசீலனுக்கும், செல்வி சலோமி தமயந்திக்கும், வெள்ளவத்தை D.R.C. தேவாலயத்தில், கடந்த டிசம்பர் 30 ஆம் திகதி சனிக்கிழமை, மாலை 4.30 மணியளவில் திருமணம் நிறைவேறியது. மணமகன் செல்வசீலன், தற்போது கனடாவில் வசிக்கும் திரு. தொமஸ் தேவராசா தம்பதிகளின் மகன். மணமகள் சலோமி, கொழும்பில் மவுண்ட் லவனியாவில் வசிக்கும் திரு. அலெக்ஸ் P. இராஜரத்னம் தம்பதிகளின் மகள். திருமண ஆராதனை வண. T.S. பிரேமராசா அவர்களால் நடத்தப்பட்டது. வண. S. ஜெயநேசன் மணமக்களுக்கு அறிவுரை வழங்கினார். வண. டி. ஆர். அம்பலவாணர் இறுதிச் செபங்களைச் செய்து ஆசீர்வாதம் வழங்கினார். மணமகன் C. S. I. யாழ். பேராயத்தில் திருப்பணியாற்றிய காலஞ் சென்ற வண G. D. தொமஸ் அவர்களின் பேரப்பிள்ளையாவார். இதன் பின் அனைவர்க்கும் ஓட்டல் தாஜ் சமுத்திராவில் விருந்துபசரணை நடைபெற்றது.

### மரணம்.

நவாலியைச் சேர்ந்த காலஞ் சென்ற திரு. எட்வின் சாமுவேல் அவர்களின் மகளும், வட்டுக் கோட்டையில் வசிக்கும் திருமதி A. போல் அவர்களின் சகோதரியுமாகிய திருமதி ஐரீன் பத்மினி அருள்ராசா, கடந்த டிசம்பர் 30-ம் திகதி, வட்டுக்கோட்டையில் திரு. A. போல் அவர்களின் இல்லத்தில் காலமானார். இவர் இறக்கும் போது 47 வயதுடையவராயிருந்தார்.

இவரின் இறுதியாராதனை, வட்டுக்கோட்டைச் சபைக் குரு வண. A. ஜெயக்குமாரன் அவர்களால், வண. T. தேவநேசன், திரு. A. போல் ஆகியோரின் உதவியுடன் நடத்தப்பட்டது. வண. சேவக் சாம் அல்பிறட் அவர்கள் அருளுரை வழங்கினார். பேராயர் அருள்மிகு அம்பலவாணர் அவர்கள் ஆசீர்வாதத்தை வழங்கினார். இதன் பின் அன்னாரின் நல்லடக்க ஆராதனை மானிப்பாய்ச் சபைக் கல்லறைத் தோட்டத்தில் வண. சாம் அல்பிறட் அவர்களால் வண. தேவநேசனின் உதவியுடன் நடத்தப்பட்டது. பத்மினியின் கணவன் திரு. T. அருள்ராசா கனடாவில் வசிக்கிறார். இவரின் இழப்பால் கவலையுறும் இவரின் சகோதரர் திரு. எட்வின் சாமுவேல், டாக்டர் மேர்வின் J. சாமுவேல், திரு. F. சொலமன் சாமுவேல், திருமதி பமெலா பீடிள், திருமதி விநோதினி போல் ஆகியோருக்கும் எமது அனுதாபங்கள் உரித்தாகுக.

### கைதிகள் விடுதலை.

இரண்டு சோவியத் போர்க் கைதிகளை ஆப்கானிஸ்தான் கிளர்ச்சியாளர்கள் விடுதலை செய்துள்ளனர்.

பெஷாவரிலுள்ள முஜாஹிதீன்களின் இராணுவத் தலைமையகத்தில், நூற்றுக்கு மேற்பட்ட பத்திரிகையாளர்கள் முன்னிலையில் கைதிகள் வீடுவிக்கப்பட்டனர்.

விடுதலை செய்யப்பட்ட சோவியத் போர்க் கைதிகள் இருவரினதும் தாயார்களை, பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனாசிர் பூட்டோ சந்தித்துப் பேசினார்.

கைதிகளைக் கையேற்ற சோவியத் தூதுவர், முஜாஹிதீன்களின் இந்த நல்ல செயலுக்கு நன்றி தெரிவிப்பதாகக் கூறினார்.

### விமான விபத்து.

நிக்கரகுவாவில் இருந்து சல்வடோர் கிளர்ச்சிக்காரர்களுக்கு ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு சென்ற சிறிய விமானமொன்று எல் சல்வடோரின் கிழக்குப் பகுதியில் சனிக்கிழமை விபத்துக்குள்ளாகியது.

இந்த செஸ்னா விமானத்தின் மூன்று விமானிகள் விபத்தில் பலியானதாகவும், இன்னொருவர், பிடிபடுவதிலும் பார்க்க இறப்பதே மேல் என்று எண்ணித் தன்னைத் தானே சுட்டுக்கொன்றதாகவும் சல்வடோர் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. இராணுவச் சீருடையில், நிக்கரகுவாப் படை வீரர்களே விமானத்தை ஓட்டி வந்ததாகவும், அந்த வட்டாரங்கள் கூறின.

### பேசும் சாதனை.

432 மணித்தியாலங்கள் தொடர்ந்து பேசி, பேசும் சாதனையைத் திரு. தீரன் மீண்டும் முறியடித்தார்.

திரு. தீரன் மதுரையைச் சேர்ந்த பாடசாலைத் தலைமையாசிரியர்.

வி. ஜி. பி. தங்கக் கடற்கரை உல்லாச விடுதியில் கடந்த ஆண்டு ஆகஸ்ட் 13 -ம் திகதி இடைவிடாது பேசும் சாதனையை ஆரம்பித்தார்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தலைப்பில் பேசினார்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் 360 மணித்தியாலங்கள் தொடர்ந்து பேசிய திரு. எஸ். இ. ஜெயராமன் நிகழ்த்திய சாதனையை அவர் முறியடித்தார்.

### நீரிழிவுக்கு.

நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு மீனெண்ணெய் சிறந்த பரிகாரமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நீரிழிவு நோயாளர்களின் இரத்த அழுத்தத்தைக் குறைப்பதற்கும், குருதிக் கலன்களின் இரத்த ஒழுக்குகளைத் தடுப்பதற்கும் மீனெண்ணெய் பயன்படுவதாக மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

### பொன்மொழிகள் சில.

தொல்லைகள் நிறைந்த இவ்வுலகில் சரியானபடி வழி நடத்தப்பட்ட மக்களைப் போதியளவு உண்டு பண்ண முடியுமானால், வழிப்படுத்திச் செலுத்தும் ஏவுகணைகளுக்கு அவசியமேயில்லை.

—ஜென. டேவிட்ஷுப்.

காற்றாடி காற்றோடல்ல, காற்றுக் கெதிராகவே உயரப்பறக்கிறது.

—வின்ஸ்ரன் சேர்ச்சில்.

உன்னைக் கையாள உன் தலையையும், மற்றவர்களைக் கையாள உன் இதயத்தையும் உபயோகி.

—ஆங்கில மஞ்சரி.

வாழ்க்கையின் ஓர் இலக்கே தேடற்கரிய திரவியம்.

—R. L. ஸ்ரீவன்சன்.

மனித இயல்புடன் வாழப் பாதுகாப்பளிக்கும் ஓர் உலகமே நமக்கு வேண்டும்.

—கோல்ட்பேர்க்.

சிறுகதை.

## "24-ம் தேதி நடுச்சாமம் 12 மணி...."

இப்படி அடிக்கடி போய் இனிப் பயனில்லை- பொது வைத்தியசாலையைத் தவிர வேறு வழியில்லை என எண்ணிக் கொண்டு, தனது வீட்டுக் 'கேற்'றடி வரை வந்த மேரி, திடீரெனக் கால் சறுக்கி விழுந்து விட்டாள். தலாத்துஓயாப் பொது வைத்தியசாலையில் மருத்துவ வசதி போதாதென்பதால், மேரியை கண்டி பொது வைத்தியசாலைக்கு ஏற்ற முடிவாகியது. மேரிக்கு அது விருப்பமில்லை. கொழும்பில், தனது சிறியதாயின் மகள் றோசலின் வாழ்வதால், தன்னை, கொழும்புக்கு அனுப்புமாறு பணித்தாள் அவள்.

கொழும்பு ஆமர் வீதியிலுள்ள பிரத்தியேக வைத்தியசாலை ஒன்றில் மேரியைச் சோர்த்தார் ஜோசெப்...... றோசலின்தான் அவளுக்கு உதவி. றோசலின் அங்கு தங்கி தனது ஒன்றுவிட்ட அக்காளுக்கு அனைத்துச் சேவையும் செய்து வந்தாள். எந்தெந்த நேரத்தில், எதை எதைச் செய்யவேண்டுமோ அதையெல்லாம் அன்போடு- சேவைமனப்பான்மையோடு-முகமலர்ச்சியோடு- கிறிஸ்தவள் என்ற முத்திரைக்குக் களங்கமேற்படாத முறையோடு செய்துவந்தாள் அவள்.

மேரியைப் பார்ப்பதற்கு, றோசலினுடைய மகன்மார் இருவரும் மாலை ஐந்து மணிக்குத் தவறாமல் வந்து விடுவார்கள். றோசலினுடைய மூன்று பெண்பிள்ளைகளும், சமையலை முடித்துவிட்டு, தமையன்மார் வராத நாட்களில், தங்கள் தந்தை பென்ஜமினோடு மாலை ஐந்து மணிக்கு வந்து விடுவார்கள் பெரிய தாயாரைப் பார்ப்பதற்காக. வைத்தியரின் திறமையாலும்—றோசலின் குடும்பம் காட்டும் ஆதரவாலும்—கிறிஸ்துவின் அருளினாலும் மேரியின் உடலிலே தேற்றங் கண்டு கொண்டு வந்தது. இருந்தாலும், மேரியின் உள்ளூர்ந்த கவலை நின்றபாடில்லை. கிழமை நாட்களில் மேரியைப் பார்க்க வரும் ஸ்ரீபனும் ஜோசெப்பும் அவளது கவலையை அறிவார்கள். இருந்தும் என்ன செய்வது? கிறிஸ்ரொபரை, கிறிஸ்ரினாவுக்கு மணம் செய்து கொடுத்திருக்கலாமென்ற நிலையினால், மேரி கண்ணீர் விடுகிறாள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனாலும்- கிறிஸ்ரினாவுக்கு இதை இப்போ எழுதினால், கிறிஸ்ரினா என்ன நினைப்பாள்-கிறிஸ்ரொபருக்கு எழுதலாமென்றால் அதையும் எப்படி எழுதுவது என்றெல்லாம் அவர்களுக்கு ஒரே யோசனை. கிறிஸ்தவர்களாயிருந்தும் சாதி-உயர்வு-தாழ்வு இப்படியெல்லாம் பார்த்து, இயேசுவின் கொள்கைகளுக்கு எதிராக நாங்கள் நடந்ததால்த்தான், அம்மாவை நடக்க முடியாத நோய்காரியாக்கி, அதைப்பார்த்துச் சதா வேதனைப்படும் நோயாளிகளாய் எங்களையும் ஆக்கிவிட்டார் ஆண்டவர் என்றெல்லாம் நினைத்து அழுவார்கள். அந்த நேரமெல்லாம் அவர்களின் நினைவிலே நிழலாடிக் கொண்டிருப்பான் கிறிஸ்ரொபர்.

கிறிஸ்ரொபர் ஏ.எல் படித்துக் கொண்டிருந்த காலத்தில், யாழ்ப்பாணத்திலுள்ள சென். ஜோன்ஸ் கல்லூரியில்த்தான் பயின்று கொண்டிருந்தான். இரத்தினபுரி மாவட்டத்தின் அன்றைய கல்வி நிலை போதாதென்பதாலும், கிறிஸ்தவக் கல்லூரியொன்றில்ப் படிக்கவேண்டுமென்பதாலும், கிறிஸ்ரொபரின் அப்பா, சுண்ணாகத்திலே சப்பாத்துக்கடையொன்று நடத்திவந்த படியாலும், சென். ஜோன்ஸ் கல்லூரியில் படிக்கும் வாய்ப்பு, கிறிஸ்ரொபருக்கு ஏற்பட்டு விட்டது-தங்குமடத்தையும், சப்பாத்துக் கடையோடு காணப்பட்ட அறையொன்றிலே வைத்திருந்த கிறிஸ்ரொபருக்கு, சுண்ணாகம்/இராமநாதன் இசைக் கல்லூரியின் விழாவொன்றிலே கிறிஸ்ரினாவைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

இசைக்கல்லூரியில் இசையும் நடனமும் படித்துக் கொண்டிருந்த கிறிஸ்ரினா, கிறிஸ்ரொபரோடு பழகும் சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன்படுத்தினாள். அதற்கொரு காரணமும் இருக்கத்தான் செய்தது. இருவரும் ஒரே நோக்குக் கொண்டிருந்ததுதான் அந்தக் காரணம். அந்த நோக்கினால் இருவரும் நெருங்கிப் பழகினார்கள்—அந்தப் பழக்கம் காதலாகப் பரிணமித்தது.

ஏ.எல் முடித்து, பேராதனைப் பல்கலைக் கழக அனுமதி பெற்ற கிறிஸ்ரொபர், சுண்ணாகத்தை மறந்து விடவில்லை. சந்தர்ப்பம் எட்டிய போதெல்லாம் இராமநாதன் இசைக்கல்லூரி விழாக்களிலே அவன் காட்சியளிப்பான். தனது அழைப்பை ஏற்று, கிறிஸ்ரொபர் வருவது, கிறிஸ்ரினாவுக்கு ஒரே குதூகலம். மழையைக் கண்ட தோகை மயிலாக நடமாடுவாள் அவள். இருந்தாலும் தத்தம் கொள்கைகளைக் கடைப்பிடித்து, அவற்றை ஓரளவு நிறைவு செய்த பின்னரே, தாம்பத்திய வாழ்க்கையில் தாங்கள் ஈடுபட வேண்டும் என்ற நிலையையும், கொள்கையையும் கடைப்பிடித்தார்கள் இருவரும்.

பி.எஸ்.சி. முதலாம் பிரிவில் அதாவது பெஸ்ற் கிளாசில் சித்தியடைந்த கிறிஸ்ரொபருக்கு, ஆசிரியத்துறையைத் தவிர வேறெந்தத் துறையிலும் நாட்டம் வரவில்லை. பின் தங்கிய தனது கிராமத்திலுள்ளவர்களின் அடிப்படைக் கல்வியறிவையும், பண்பையும் கட்டியெழுப்ப வேண்டுமென்பதே அதற்குக் காரணம். ஆசிரியப் பணியை ஏற்ற அவனுக்கு, அவனுடைய 'கிரிவத்த' கிராமத்தில் இடம் கிடைத்தது இறைவனின் செயலென்றே கருதினான்—பணியும் சிறப்பாக நடந்து கொண்டேயிருந்தது. ஆசிரியப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த காலத்திலிருந்து அவனது சிந்தனையெல்லாம் அதற்காகச் செலவழிந்ததனால், கிறிஸ்ரினாவுக்குக் கடிதம் வரைவதையும் குறைத்துவிட்டான்.

தனது பாடசாலை விலாசமிட்டு, கிழமைக்கு இரண்டு தடவை தனக்குக் கடிதம் எழுதிவந்த கிறிஸ்ரொபர், இப்போதெல்லாம், கடிதம் எழுதுவதைக் குறைத்து விட்டாரே என்றெண்ணி மனமுடைந்த போதும், கிறிஸ்ரொபரைத் தனது உள்ளக் கோவிலிலே கடவுளாக்கி வணங்குவதை, கிறிஸ்ரினாவால் மறக்க முடியவில்லை. தாய் - அண்ணன்-மாமன்-உறவினர் ஆகியோர் பேசிய கலியாணங்களையெல்லாம் அவள் தட்டிக் கழித்ததற்குக் காரணமும் அதுதான்.

அதுவே, மேரியின் வேதனைக்கும் காரணமாகி அவளை, வைத்தியசாலையில்ப் படுக்கவைத்துவிட்டது. அன்று மார்கழி 24-ம் தேதி-நடுச்சாமம் பன்னிரண்டு மணிக்கு, மேரி படுத்திருந்த வைத்தியசாலைச் சுவர்க்கடிகாரம் பன்னிரண்டு அடித்து, அவளை விழிக்கவைத்தது. மெதுவாக எழுந்து பார்த்தாள். றோசலினின் குறட்டை, றோசலினின் உடல் அலுப்பை வெளிக்காட்டிக் கொண்டிருந்தது.

பகல் முழுவதும் மட்டுமல்ல, தான் விழித்திருக்கும் இரவுப்பொழுதுகளிலும் தனக்காகக் கண்விழித்துக் கடமை செய்யும் றோசலினின் நிலையறிந்து அவளை எழுப்ப விரும்பாது, தானாகவே எழுந்து ரொயிலற்றுக்குப் போகத் தீர்மானித்தாள் மேரி.

பக்கத்துக் கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த றோசலின் திடீரென விழித்தபோது, மேரி அங்கில்லை. திகைத்தாள் றோசலின், அவளது திகைப்பு வளருமுன், மெதுவாக நடந்து நடந்து றோசலினின் முன்னால் வந்து நின்ற மேரியைக் கட்டித் தழுவி அன்பு முத்தமிட்டாள் றோசலின். அவளுக்கு ஒரே ஆனந்தம். இறைவனுக்குத் துதி செலுத்திக் கொண்டிருந்தார்கள் இருவரும்.

மூன்றாம் நாள் மாலை நாலு மணிக்கு அங்கு வந்த மேரியின் மகன் ஸ்ரீபன் - மேரியின் தம்பி ஜோசெப் ஆகியோருக்கு, மன மகிழ்ச்சி பொங்கிவழிந்து கொண்டிருந்தது. நீர் வெடித்துக் கொதித்துக் கொண்டிருக்கும் நீராவியால்

(மிகுதி 4ம் பக்கத்தில்)

## "வருகிறார் சமாதானப் பிரபு"

சத்திய மன்பு நடுநிலை யறிவு சேர்வீரமுந் தழைக்க
புத்திர யேசு உலகினிற் புகுந்தனன் புகுதலும் மக்கள்
புத்தியிற் பயமும் அடிமையு மகலப் புகுந்தது சுதந்திர சக்தி
நித்திய மிலங்கை அன்னையு மன்பு நெறிக்கிலக் காகியோனருள்.

உத்தமனார் உருவாக்கிய உலகினில் எத்தனை நடப்புக்கள்
அத்தனின் அன்பை அறியா ஆணவக் கொடுப்புக்கள்
இத்தனையுங் கொண்டு அணு ஆயுதக் குவிப்புக்கள்
செத்து மடியவோ வந்தோம் என மக்களின் ஏக்கத் தவிப்புக்கள்.

வீட்டினிலே எத்தனை வாலிபர் படிப்பில்லா அடைப்பு
வீட்டுக்கு வெளியே நடமாடிவிட்டால் படைவீரர்களின் பிடிப்பு
கட்டிலிலிருந்து தொட்டிலிட்டு வளர்த்த பெற்றோரின் மனக்கொதிப்பு
கூட்டுக்குள் கிளிபோல் எத்தனையோ கன்னிகள் சீதனத்தால் முக்குளிப்பு

நாட்டிற்குள் இருக்க அஞ்சி மக்கள் வெளிநாட்டிற்கு அகதியாய் ஓட்டம்
நாட்டினிலே வறுமை, பிணி, திண்டாட்டம்—இதனால்
நாடுவீட்டு நாடுமதுபோதை கடத்தலினால்க் கொண்டாட்டம்
நாட்டமிலாப் பிடிபட்டோர் விடுதலைக்காய் மன்றாட்டம்.

பொறுமைக் கினிஏது எல்லை பொறுத்ததினிப் போதுமென்ற போதனை
புலர்ந்தது
வறுமை வெள்ளம் பிற்றிடவே காசினி நாயகன் காட்சிதர
வருகவென்றே வாழ்த்துரைப்போம் சமாதானப் பிரபு உலகில் உதித்தனன்.

அழுதலில்லை விழுதலில்லை ஆனந்தம் ஆனந்தம் அப்பா பரமானந்தம்
எழுந்தாற் பரிந்திட வந்ததே சமாதானச் சந்தம்
தொழுவோம் எழுங்கள் தோளோடு தோள்மேற் கைகளைப் போட்டு
தோழனைக் கண்டே துதிப்போம் வாருங்கள்.

## என் அன்னை.

(மானிப்பாய்/ கிறீன் மருத்துவமனையில் மருத்துவராகக் கடமையாற்றி வரும் டாக்டர். விசுவலிங்கம் அவர்களின் பாட்டியார், திருமதி எலிசபெத் தம்பிராசா அவர்களின் அன்னை 102 ஆண்டுகள் வாழ்ந்தவர். தம் அன்னையைத் தம் குழந்தைபோல், பராமரித்த அம்மையாருக்கு ஊக்கமளித்த பாடல் இது. இப்பாடல் ஆங்கிலத்தில் Dr. Frank Gaue அவர்களால் எழுதப்பட்டது. இதனைத் தமிழாக்கம் செய்தவர் திருமதி E.S. தம்பிராஜா ஆவார் )

என் அன்னைதா னவர் சடவுறவில்
என்றாலும் இப்போ என் சிசுவே அவர்.
அன்றோ! முதியோர் குழந்தைகள் தானே
அன்பிற் குரியோர், ஆதரவு வேண்டுவோர்
அன்னாரது யேசுநாதர் கூறிய விண்ணரசு.

எழுகிறது ஓரெண்ணம் என் னுள்ளத்தில்
வாழும் பரப்பில் தோன்றுவன வெய்யும் சமநிலை.
ஏழை மையில் என்னைப் போற்றிப் பேணினார்
கிழவி யானாலும் சேயெனக் காத்து
பழைய கடனை யிறுக்க விதைக்கிறேன்.

தனிமை யணுகவொட்டாது காத்தார் தம்சேயை
கனிந்த அவரை நான் ஏக்கமுற விடுவதில்லை
பணிந்த பொறுமை கொண்டா ரென்னோடு
நனிந்த பொறையோடு அவரை ஆதரித்து
தேனினிய அன்பு சொரிகிறேன்.

அப்போ அவரெனக்குப் பாலூட்டினார்
இப்போ இன்ப மூட்டுகிறேன் அவருக்கு
அப்போ அர்ப்பணமானது அவர் யௌவனம்,
இப்போ அவரின் பலவீனமும், பிள்ளைத்தனமும்
தப்பாது என்னுள்ளத்தை ஈர்க்கிறது.

சந்தமிலா வெனை ஏந்தித் தாலாட்டி, தம்
சொந்த வான்மபாக மெனக் கொண்டார். ஏன்?
பந்தமான அவர் மெயிருந்து நான் தோன்றியதால்
எந்தை பொருள் நேரம் அவர் ஆதாரம்
விந்தை இத்தியாகம் கிளர்க்கு மின்பம்.

## தமிழ்க்கிறிஸ்தவர்கள்......

தமிழ் மண்ணின் மைந்தர்களான- தமிழ்க் கிறிஸ்தவர்களது திருமணம் மற்றும், மரண ஆராதனைகளில் கலந்து கொள்ளும் பிற சமயத்தவர்கள் அங்கு வினியோகிக்கப்படும் அச்சடித்த ஆராதனை ஒழுங்குகளை, பாடல் பிரதிகளைப் பார்த்துவிட்டு சாதாரணமாகக் கேட்கும் ஒரே கேள்வி ''அனேகமாக அல்லது முழுமையாக ஆராதனைகளும், ஒழுங்குகளும், பாடப்படும் பாடல்களும் தமிழில் இருக்கும்போது சம்பந்தப்பட்ட வெளியீடுகளின் முகப்பு அட்டையில் காணப்படும் வாசகங்கள் மட்டும் யாருடைய நலனுக்காக ஆங்கிலத்தில் வெளியிடப்படுகின்றன?'' என்பதே. அர்த்தமுள்ள கேள்வி அது! விடையுண்டா?

ஒரு மரண வீட்டில் வழங்கப்படும் நல்லடக்க ஆராதனை ஒழுங்கில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் பாடல்கள் அனைத்தும் தமிழாக இருக்கும். ஆயினும், முகப்பு அட்டையில் இறந்தவரது பெயரும் அவரது பிறப்பு, இறப்புத் திகதிகளும் பிரபல்யத்துக்காக ஆங்கிலத்தில் வெளியிடப்படுவதைப் பார்த்து ஏன் என்றுதான் கேட்கிறோம்.

தமிழ்க் கிறிஸ்த்தவர்களாகிய நாம் எதன் பொருட்டு தமிழர் என்பதை ஏற்றுக்கொள்ளத் தயங்குதல் வேண்டும். இந்தத் தன்மானம் இழந்த தாழ்வு மனப்பான்மை, தமிழ்க்கிறிஸ்த்தவர்களிடம் எவ்வாறு ஏற்பட்டது என்பது இன்றைய நிலையில் ஆய்வு செய்யப்பட வேண்டிய ஒரு விடயமே.

யாழ்.மாநகர சபை எடுத்த ''குடியியல் வாரம்'' சார்பாக வெளியிடப்பட்ட 'சிறப்பு மலரில், யாழ்.நகரின் வரலாற்றை எழுதும்போது பேராசிரியர் இந்திரபாலா, யாழ். நகரின் மத்தியில் காணப்படும் அடைக்கல மாதா கோவில், அற்புத மாதா கோவில் என்ற பெயரில் போர்த்துக்கேயர் வரவின் முன்பே அதே இடத்தில் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். ஐரோப்பியர் வருகைக்கு முன்பே பரிசுத்த தோமாவினால் கிறிஸ்தவம், தென்இந்தியாவுக்கும் பரப்பப்பட்டதாகப் பகரப்படுகின்றது.

ஆயினும், பெரும்பாலான இன்றைய கிறிஸ்தவர்களை மதம் மாற்றிய கிறிஸ்தவ மிஷனரிமார், தமிழ்மொழியைப் படித்து, விவிலிய நூலைத் தமிழில் மொழி பெயர்த்தே தமிழ்மொழி மூலமாகவும், தமிழ் விவிலியத்தினூடாகவும் அப்பணியைச் செய்திருந்தார்கள். தமிழ் மக்களைக் கிறிஸ்தவர்களாக்குவதற்காக ஐரோப்பிய மிஷனரிமார், தமிழ்மொழியை உபயோகிக்கப் புகுந்து, அதில் பாண்டித்தியம் பெற்றவர்களாக, தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் உதவினார்கள் என்பதை தமிழ்க்கிறிஸ்தவர்களாகிய நாம் ஏன் மறந்து போனோம்? எதற்காகத் தமிழ்மொழியை எமது வெளியீடுகளில் அதிலும் குறிப்பாகத் தமிழ் வெளியீடுகளில் தரம் குறைக்கத் தலைப்படுகிறோம்.

எதிர்காலத்திலாவது, இத்தவறு திருத்தப்பட, இன்று தனியார் பாடசாலைகளாக இயங்கிவருகின்ற- தமிழ்மொழியைப் போதனாமொழியாகக் கொண்ட கிறிஸ்தவ பெரும் பாடசாலைகளின் விழாக்களும் வைபவங்களும் முன்மாதிரி காட்டி, தமிழ்க்கிறிஸ்தவ மக்களுக்கு வழி வகுக்க முன்வர வேண்டும்.

கிறிஸ்தவ பெரும் பாடசாலைகள் அனைத்தும், இப்பணியைக் கூட்டாக ஆரம்பிப்பதற்கு எதிர்வரும் நவம்பர் நடுப்பகுதியில் அவை கூட்டாக நடாத்தும் நத்தார் இசை நிகழ்ச்சி உதவட்டும். தேசியம் இல்லாது சர்வதேசியம் மலராது. ஆங்கிலம் மட்டும் சர்வதேசிய மொழியும் அல்ல, தமிழ்க்கிறிஸ்தவர்கள் சர்வதேசியத்தைப் போற்றுவதற்காகத் தமிழ் தேசியத்தைத் துறக்க வேண்டியதில்லையே என்பதை வலியுறுத்த அவாவுகிறோம். நியாயமான அளவு தமிழ் உபயோகத்தை இனியும் தமிழ்க்கிறிஸ்தவர்கள் நடைமுறைப்படுத்தக்கூடாது.

''பெற்றம்மா''

## நாமும் உணவும்.

வறுமையின் காலம் எதிர்நோக்கி நிற்கிறது; அரிசித் தட்டுப்பாடு காத்துக் கிடக்கிறது; விழிப்பாயிருங்கள்; வேண்டியன செய்யுங்கள் என்ற பேச்சுக்களை அடிக்கடி கேட்கிறோம். பூந்தோட்டங்கள் காய்கறித் தோட்டங்களாகட்டும், விளையாட்டிடங்களும் உணவு உற்பத்தி நிலங்களாகட்டும். கிடைக்கும் நிலமெங்கும் உணவு உற்பத்தி நடக்கட்டும் என்ற ஆலோசனைகள் மலிகின்றன. உற்பத்தியைப் பெருக்குவதோடு ஒறுத்து வாழவழியும் கூறப்படுகிறது. கிடைப்பதை, மீதமாயிருப்பதைப் பக்குவப்படுத்தும் வழிகள் ஆங்காங்கு ஏற்படுத்தப்படுகின்றன. நல்ல ஆலோசனைகள், நல்ல முயற்சிகள், நாட்டுக்கு வேண்டிய ஏற்பாடுகள், எச்சரிப்புகள், வெளிநாட்டுக் கையிருப்பைக் காக்கும் ஏற்பாடுகள், இந்நாட்டு மக்கள் யாவரும் ஏற்றாக வேண்டியன.

பொதுவாக இவை கூறப்பட்டு, செய்யப்பட்டு வந்தாலும் நாட்டின் தனித்தனிப் பகுதிகளுக்கு வெவ்வேறான ஏற்பாடுகள் வேண்டிக் கிடக்கின்றன என்பதையும் மறந்து விடலாகாது. யாழ்ப்பாணத்தில் ஏராளமான வெங்காயம் முளைத்துக் கெடுவதாய்ச் செய்தி வருகிறது. அது காக்கப்பட, காசாக, விவசாயிகள் கஷ்டம் நீங்க வழி செய்யவேண்டாமா?

பழங்கள் சேமிக்க, பால்மா தயாரிக்கத் தொழிற்சாலைகள் உண்டாக்கப்படுகின்றன. நாளாந்த உபயோகத்துக்கே போதியதான பழங்களைத் தகரத்துள் அடைந்து விடுவதால் நன்மை ஏற்படாது, பழங்களின் விலைதான் கூடும். நாளாந்த உபயோகத்துக்கே போதாத பாலை மாவாக்கி விடுவதால் என்ன பலன் ஏற்படும்? பாலின் விலை அதிகரிக்கலாம். சேமித்து வைக்கப் போதியதான பழங்கள் உற்பத்தியாக வேண்டும், பாற்சாலைகள் பெருக வேண்டும், அப்பொழுதுதான் இத்தொழில்கள் பலிதமடையும்; பயனும் தரும். எனவே எவ்வெப் பகுதிகளில் எவ்வெப் பழங்கள் உண்டாகுமோ அங்கெல்லாம் அப்பழங்கள் பயிரிட்டாக வேண்டும். ஆலோசனையும் உதவியும் கிடைக்க வேண்டும். பாற்சாலைகள் பெருக வசதியான இடங்கள் ஆராயப்பட வேண்டும். பசுக்கள் பெருகவேண்டும், எங்கும் எல்லாரும் இதைச் செய்துவிட முடியாது. மறு உணவுப் பொருட்களும் அப்படியே.

இவை பற்றிய அறிவு மக்களுக்கு ஊட்டப்பட்டு, உதவியளிக்கப்பட்டாலன்றி உருப்படியான பலன் ஏற்படா. உணவு உற்பத்தித் தொழிலிலே வேறுபாடுகளும் விருப்பமும் இருந்தாலன்றித் தக்க பலனை எதிர்பார்க்க முடியாது.

யாழ்ப்பாணத்திலோ வரண்ட பிரதேசத்திலோ இருப்பவர்கள் தானியங்களும், பழங்களும், காய்கறிகளும் நிறைய உற்பத்தி செய்யலாம் வரகும், தினையும், பயறும், எள்ளும், நெல்லும், குரக்கனும் சேமித்து வைக்கப்பட்ட கூடைகள் காணாமற் போய்விட்டன. பனாட்டுக் கூடைகளைப் பரணில் காணோம்; ஒடியற் சாக்குகளைக் கண்டு கன காலமாயிற்று, இவற்றையெல்லாம் தேடிக் கண்டு பிடித்தாகவேண்டும், முக்கனிகள் பெருகவேண்டும். வேறு பழமரங்கள் பெருகவேண்டும். அதிலேதான் தமிழர் வாழ்வும் தங்கியுள்ளதென்றால் தவறில்லை.

அன்றொருநாள் ஒரு முன்னாள் பாடசாலை அதிபர் யாழ்ப்பாணத்தவர்கள் ஏற்றுமதி செய்ய வழிதேட ஆலோசனை கூறினார். கரும்பில்லாது சீனி செய்ய எடுத்த முயற்சி தோல்வி கண்ட நேரத்திலே கருப்பட்டி பெருகினால் எப்படி? பொருளாதாரம் பெருகாதா? பனம்பழத்தைப் பக்குவப்படுத்த மறந்து விட்டோமே. பாணிப்பனாட்டுக்கும் பிரதேச 'சொக்களெட்'டுக்கும் சுவையில் வேறுபாடுண்டா? இவையெல்லாம் ஆராயப்படவேண்டும்.

விசேடமாக இந்த நெருக்கடியான காலத்தில், உத்தியோகமோ வேறு பொருளாதார வசதியோ தமிழருக்குத் தட்டுப்பாடாயுள்ள இக்காலத்தில், வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வரும் இக்காலத்தில் இவ்வித ஊக்கமன்றோ ஆக்கந்தர வல்லது. உணவைப் பெருக்குவோம், உவகையோடு வாழ வழி காண்போம். நாமும் உண்டு மற்றவரும் உண்ண உதவுவோம். அதற்கான திட்டங்களைத் தீட்டுவோம்; ஆராய்வோம்; செயலில் இறங்குவோம் இன்றைய நிலையில் நாட்டுக்குச் சேவை செய்ய இதைவிட வேறு சிறந்த மார்க்கமுமுண்டோ?

அ. ஜெயசிலன்.

---

சிறு கதை -- தொடர்ச்சி

மேலெழும்பி நடமாடிக் கொண்டிருக்கும் உலை மூடியைப் போல்க் காணப்பட்ட அவர்கள், நன்றி சொல்லிக் கொண்டிருந்தார்கள் றோசலினுக்கு.

''எனக்கெதுக்கப்பா நன்றி. அக்காவைக் குணப்படுத்தின யேசுவுக்கும் இறைவனுக்குந்தான் சொல்லணும்'' என்று றோசலின் சொல்லிக் கொண்டிருந்தபோது, அங்கு வந்து நின்றார்கள் சசிக்கலாவும் றஜிக்குமாரும், எல்லோருமாகப் பிள்ளைப்பேறு வார்ட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தபோது, மேரிக்கோ மற்றவர்களுக்கோ இதுவரை தெரியாமலிருந்த உண்மைகளைச் சொல்லிமுடித்தாள் சசிகலா.

இரத்தினபுரிக்கு மாற்றம் கிடைத்து அங்கு சென்ற கிறிஸ்ரினா, தான், இந்தியா போவதாகப் பொய் சொன்னதையும்—மேரிக்கு எழுதும் கடிதங்களை, கிறிஸ்ரினா தனக்கு அனுப்ப, தானே, மேரிக்கு இலங்கை விலாசமிடுவதையும், கிறிஸ்ரினா இரத்தினபுரிக்குச் சென்ற அடுத்த மாதமே, கிறிஸ்ரொபரின் தாய், தந்தையர், கிறிஸ்ரொபருக்கு மணம் பேசியதையும்- அதை உடனடியாக நிறுத்துவதற்காகவே கிறிஸ்ரினாவை, கிறிஸ்ரொபர் பதிவுத்திருமணம் செய்ததையும்-திருமணம் நிறைவேறி எட்டாவது மாதத்தோடு, கடிதப் போக்குவரத்தைக் கிறிஸ்ரினா நிறுத்திவைத்ததையும் - டிசெம்பர் 24-ம் தேதி இரவு பன்னிரண்டு மணிக்கு, மகன் பிறந்த மகிழ்ச்சியை, தந்தி மூலம் தனக்கு, கிறிஸ்ரொபர் அறிவித்து, மேரி வீட்டாருக்கும் தெரிவிக்கும்படி எழுதியிருந்ததையும்- நோய்வாய்ப்பட்டு, மேரி இங்கிருப்பதை ஊரார் மூலம், தான், கேள்விப்பட்டதையும் ஒன்று விடாமல் சசிகலா கூறிமுடித்த போது, பிள்ளைப்பேறு வார்ட்டுக்குள் காலடி வைத்தார்கள் அனைவரும்.

கிறிஸ்ரினாவின் கண்களிலிருந்து பொலு பொலுவென்று வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டிருந்தாள் மேரி. ஸ்ரீபனும்- றோசலினும்-றோசலின் பிள்ளைகளும்-ஜோசெப்பும் கிறிஸ்ரினாவின் மகனைத் தூக்கி, மாறி மாறி முத்தம் பொழிந்த பின் மேரியின் மடியிலே கிடந்தான் அவன்.

அந்த நேரம் மேரியின் கண்களிலும் நினைவிலும் படர்ந்த அந்தக் காட்சி......... அப்பப்பா...... அவளின் உடலைச் சிலிர்க்க வைத்தது. இவன் பிறந்த அதே வேளையில், வழங்காமலிருந்த தனது கால்கள் குணமாகித் தன்னால் நடக்க முடிந்ததை அவள் எண்ணியபோது, பெத்லஹேம் நகரில் இயேசு பாலன் பிறந்ததையும், ஏழைக்குடும்பத்தில் அவர் தோன்றியதையும் அப்படிப்பட்டவரே உலகின் இறைவனானதையும் நினைத்தாள். அது, அழியாக் காட்சியாய் அவளின் நினைவில் நின்றது. அந்த நல்ல நினைவோடு, தன் பேரனைத் தூக்கி, மாரி மாரியாய்ப் பொழிந்தாள் முத்தங்கள்.

(யாவும் கற்பனை)

எழுதியவர்:- நவாலியூர்
சி. என். செல்லத்துரை.

## இப்படிச் சொன்னார்கள்

### விதி

விதியை நம்புவது பிழை. ஐரோப்பியர் விதியை நம்புவதில்லை. ஆசியாவிலுள்ள மகமதிய சாதியாரும், இந்துக்களுந்தான் விதியை மும்முரமாக நம்புகிறார்கள். ஐரோப்பியர் நாகரிகத்திலும், செல்வத்திலும் ஓங்கி வருகிறார்கள், முயற்சி செய்பவன் நல்ல ஸ்திதிக்கு வருவான், விதியை நம்பினவன் சோற்றுக்கில்லாமல் பட்டினி கிடப்பான்.

—பாரதியார்.

### அறிவு

பறவைகளைப் பார்த்துப் பொறாமைப்படத் தேவையில்லை. நாம் பறக்கக் கற்றிருந்தால், இங்கும், அங்கும் பறந்து திரிந்து அலைவோம். இப்போது ஒரு மூலையில் இருந்தபடியே அறிவைக் கொண்டு இங்கும் அங்குஞ் சென்று உலகத்தையே அளந்து பார்க்கிறோம். இறக்கைகளைவிட இந்த அறிவுதான் சிறந்தது.

—மு.வ.

### செவிடு. குருடு

எப்போதும் தம்மைப் பற்றியே சிந்திக்கின்றவர்கள், அறுபது நாழிகையும் தம்மைத்தாமே வழிபடுவதில் ஈடுபட்டிருப்பவர்கள், அல்லும் பகலும் தமது பார்வையைக் கொண்டே உலக மனைத்தையும் பார்ப்பவர்கள், அவ்வளவேன், தம்மைத் தவிர உலகமே வேறு கிடையாதென்று நினைப்பவர்கள் பிறருடைய உள்ளத்தை வசப்படுத்தும் வழியை ஒருபோதும் அறியமாட்டார்கள். செவிடனுக்குப் பாட்டினினிமை தெரியாது குருடன் இயற்கை எழிலில் ஈடுபடமுடியாது. அப்படித்தான் இதுவும். தமது வழிபாட்டிலே மூழ்கியிருப்பவர்கள், தம்மை அறியாமலே மனத்தினால் குருடர்களாகவும், உள்ளத்தினால் செவிடர்களாகவும் இருக்கிறார்கள்.

—வி.ஸ.காண்டேகர்.

கிடைக்குங் காலத்தை எப்படிப் பயன்படுத்துவதெனத் தெரிந்தால், அது மிக நல்ல காலமாகும்.

—எமேர்ஸன்.

## தாரகை ஒளி:

நாடொறும் ஆசைகொண் டிருப்பவ ருண்டு;
நீதிமானோ பெவர்க்கும் வரையாது கொடுப்பான்.

— நீதிமொழிகள்- 21: 26 —

# எங்கள் கருத்து

## ஒப்புரவாக்குந் திருப்பணி.

ஒரு கிறிஸ்தவ குருவானவரின் திருப்பணியில் பல்வேறு அம்சங்களுண்டு. அவற்றில் ஒப்புரவாக்குந் திருப்பணி சிறந்தது. கடந்த ஆறாம் திகதி, வட்டுக்கோட்டைத் திருக்கோவிலில் நடைபெற்ற குரு அபிஷேக ஆராதனையில் அருளுரையாற்றிய போதகர், திருப்பணி விடையாளரின் திருப்பணியில் முக்கியமானது, ஒப்புரவாக்கும் பணியென, இன்றைய சூழ்நிலைக்கேற்றவாறு வலியுறுத்திக் கூறினார். இத் திருப்பணிக்கு முக்கியத்துவம் கொடுப்பது குருமாரின் தலையாய கடமை.

நமது சபைகளில், நாம் வாழும் சமுதாயத்தில் காணப்படும் சண்டை சச்சரவுகள், சபையைப் பிரிப்பதோடு மட்டுமல்ல, சமுதாயத்தின் பிரிவினைகளுக்கும் வழிகோலுகின்றன என்பதை நாம் மறுக்க முடியாது. ஆகவே, குருவானவர், பிரிவினைகளை வளர விடாமல், இரு சாராரையும் ஒன்றாக இணைக்க வேண்டியது அவசியம். சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள பிளவுகளைச் சீராக்கும் பணியிலும் கிறிஸ்தவ ஊழியன் ஈடுபடவேண்டியது அவசியம்.

சமாதானம் செய்பவர்களுக்கு நற்பேறு இருக்கத்தான் செய்கிறது. திருப்பணியில் நமக்குள்ள இந்தப் பொறுப்பை நாம் சிறந்த மனத்தோடு முழுமையாக ஒப்புக்கொண்டாக வேண்டும். கிறிஸ்தவ திருப்பணியில் உயிர் நாடியாக விளங்கும் பணி இதுவே. சமாதானம் செய்து வைப்பதுடன் மட்டும் நாம் நின்று விடக் கூடாது. ''நீதியின் நிமித்தம் துன்பப்படும்'' பொறுப்பும் நமக்குண்டு. ஒப்புரவாக்கும் பணியில் ஈடுபடும் ஒவ்வொரு போதகரும், இதனை எதிர்பார்க்க வேண்டும். இதனைத் தவிர்க்க முடியாது.

'நீதியும் சமாதானமும் ஒன்றை யொன்று முத்தஞ் செய்யும்; கிருபையும், சத்தியமும் ஒன்றையொன்று சந்திக்கும்'' காலம் வருகிறது. நீதியும் சமாதானமும் அவ்வளவு எளிதாக ஒத்துப்போவதில்லையே! அநேகமாய் அவை தனித்தனி வழியில் செல்லும் என, உலக ரீதியாக எண்ணக் கூடும். ஆனால் நாம், தம்மில் ஒன்றுபட வேண்டும் என்ற உயரிய நோக்கோடு, நமக்காகச் சிலுவையில் இரத்தம் சிந்திய இயேசுபிரான், பிரிவினைக்குக் காரணமாக இடையில் சுவர்போல் நின்ற பகைமையை அகற்றினார்.

கிறிஸ்து பெருமானே நமது சமாதானம், அவரே,பிரிந்து தொலைவிலுள்ள இரு சாராரையும்- இரு இனத்தாரையும் ஒன்றாக இணைக்கவல்லவர். அவரோடு இணைக்கப்பட்டவர்களிடையே வேறுபாடில்லை. இரு இனத்தவரையும் தம்மோடு இணைத்திருக்கும் புதியதொரு மனித குலமாகத் தோற்றுவிக்கவும், அதனால் சமாதானம் உண்டாகவும், செய்தார். பகைமை, சிலுவையினால் கொன்றழிக்கப்பட்டது. இரு சாராரையும், இரு பிரிவினர்களையும் ஒரே உடலாக அமைத்துக் கடவுளோடு நல்லுறவு கொள்ளச் செய்வதே இயேசு பெருமானின் திருவுளச் சித்தம். இதனைப் போதகர் மார் புரிந்து கொண்டு, ஒப்புரவாக்கும் ஊழியத்தில் ஈடுபட வேண்டும்.

தீமைக்குத் தூபங்காட்டாத ஒரு சமாதானத்தை இயேசுவின் சிலுவையில் மட்டுமே நாம் காண முடியும் அது தீமையோடுள்ள போராட்டத்தின் மத்தியில் கிடைக்கும் எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் , நீதியும் சமாதானமும் இணைந்து செல்வதை, சிலுவையில் மட்டுமே நாம் காணலாம். தமக்கு எதிராகப் போராடுகிறவர்களை, தமது நண்பர்களாக மாற்றவே அவர் மரித்தார். கிறிஸ்துவின் மரணத்தில், தீமை, அறவே ஒழிக்கப்பட்டதாயிற்று. அங்கு, தீமைக்குத் தூபம் போட வேண்டிய அவசியமில்லை. தீமையோடு ஒத்துப்போகாத சமாதானம், இயேசுவை, நாடுவோரை கடவுளோடு ஒப்புரவாக்குகிறது.

இன்று, நமது குடும்பங்களில்- சபைகளில்- சமுதாயத்தில் பிரிவினைகள் காணப்படுகின்றன. அங்கு, நீதிக்குப் பதிலாக, சுய நீதி முட்கள் முளைத்து வருகின்றன. இவை, தங்கு தடையின்றிப் போர்க்களமாக அமைந்து விடுகின்றன. இறுதியில், நீதி வென்ற போதிலும், கிடைத்த நன்மைகளைவிட ஏற்பட்ட அழிவுகள்தான் அதிகம். ஆகவே, குருமாரும் காலந்தாழ்த்தாது ஒப்புரவாக்கும் ஊழியத்தில் உண்மையாக ஈடுபட முன்வர வேண்டும்.

## நெருக்கடி நிலையில் கிறிஸ்தவர் கடன்.

அகஸ்ற்றின்
ஸி. திரியேகதாசன்.

நெடுநாள் நண்பராயிருந்து ஒரு நாள் கொடும் பகைவராய் மாறும் இயல்பினைச் சரித்திரத்தின் ஏடுகள் திரும்பத் திரும்பப் பகருகின்றன. தூரத்தில் உறைந்திருக்கும், சகோதரனை விட அண்மையில் தங்கியிருக்கும் அயலானே வாசி என அறிவு மருள் தெருட்டியும், பொறாமை, பெருமை போன்ற தீய குணங்களில் பெருமளவு சிறப்புப் பெற்றுத் திகழ்ந்து, அமைதியை நாடி, அதனையே உலகிற் கறிவுறுத்திவரும் பாரதப் பொன்னாட்டை இகழ்ந்து, அதன் பழங்காலப் பெருமைதனை மறந்து, போர் தொடுக்கும் அளவிற்குத் துணிபு பெற்றுவிட்ட பாகிஸ்தான் அதிபர் அயூப்கானின் புன்செயலைக் கண்டு அழுவதா,சிரிப்பதா, அறியாமையை அறிவால் ஆட்கொள்ளுவதா, அல்லது போருக்குப் போர் என்று பதிலிறுப்பதா என்று அறிவுலகம்,வினாவும் தீர்வுமாக விழித்துக் கொண்டிருக்கிறது.

யுத்த தத்துவ வகைகளைக் குறித்துச் சிந்தித்து, ஏன் போர் வருகிறது, போரினை நிறுத்த வகை யாது, களங்கமற்ற குழந்தைகளையும், தனித்து நிற்கவியலாத மகளிரையும், பெலன் குன்றி என்று இறைவனுடன் ஒன்றித்து வாழ்வோம் என விழைந்து நிற்கும் வயோதிபரையும், ஈவிரக்கம் என்று பாராது, அருள் அன்பு என்பவற்றை உணராது, ஆவையும், அரக்கனையும் ஒரு நிலையில் வைத்து அனைத்தும் ஒழிக; கனல் வீசும் குண்டுகளின் கணப்பொழுது நிகழ்ச்சியினைக் கருத்திற் கொண்டு வாடி வருந்தி, நலிந்து, கொடுமை மிக்க கானகப் பறவையினைப் போல் ஒலியினும் விரைந்து மனித இயல்பின்றிப் பொழியும், பொறிஇயல் தீக் குவியல்களைக் காணுங்காலை உடல்விட்டு உயிர் பிரியும் தகைமை நிலவுக என்ற நிலை ஏன் நிலவ வேண்டும் என்பன போன்ற வினாக்கள் வெடித்தெழுகின்றன.

குமுறும் எரிமலை, இரு புறத்துத் தலைவர்கட்கும் வெற்றிமேல் வாஞ்சை. இறக்கும் வீரரும் கணக்கிலர். பல ஆண்டுகளுக்கென விரும்பி வாழ அமைத்த வீடு- இனிய மனமாளிகை இடிந்தாற்போல் உடைந்து கிடக்கின்றது. வாழுவதற்கென உலகில் தோன்றிய மக்கட் செல்வங்கள் சிதறி வீழ்கின்றன இரு திறத்தார்க்கும் எல்லையில்லா மன வருத்தம். ஆனால் இவ்விரு புறத்தாரும் அமைதியினை விழைந்து வந்தால் எவ்வித சஞ்சலமும் இல்லை. எரிந்த சடலங்களைப் பார்த்துவிட்டோம்; தீய்ந்த உடல்களைக் கண்டுகொண்டோம், நலிந்த உள்ளங்களை நோக்கி உணர்வு பெற்றோம். நாம் இன்று விரும்பி நிற்பது அமைதி.

மனிதன் இன்று விரும்பி நிற்பது மயான அமைதியையல்ல. புதைக்கப்பட்ட உடல்கள் பல மண்ணிற்குள் பேச்சின்றிக் கிடக்க, காட்டு லில்லி மலர்கள் உலர்ந்த செடிகளுடன் காற்றில் அசைந்தாட, மாரிக்குப்பின் தோன்றும் அமைதியும், வெறுமையும் எங்கும் குடிகிடக்க, எங்கிருந்தோ தோன்றி வரும் காற்றின் ஊதலொலி அமைதியினைக் கோடு கிழித்துக்காட்ட, மறைந்துவிட்ட மைந்தனின் சடலமதை மடியிலேந்தித் தோன்றி மடியும் அலை போல, கொந்தளிக்கும் புயல் போல், ஏங்கி ஏங்கி அழுது, வடிக்க விழியில் நீரின்றி, ஒலியெழுப்பக் குரலின்றி, நீலம் பரந்து கிடக்கும் வானினை வெறித்து நோக்கிக் கொண்டிருக்கிறாளே, அந்த அமைதி இன்று தேவையல்ல.

இறைவனால் அருளப்படும் அமைதி; அருளென்ற முதிர்ந்த முகிலாலும் அன்பென்னும் தன் காற்றாலும் உலகினை நிரப்பப் பொழியும் இறைவனின் சமாதானமே வேண்டப்படுவது. நிறைந்து வழியும் கருணை, கருமை படைத்த எண்ணங்களைக் கழுவ வேண்டும். உருக்கு உள்ளங்களை உடைத்தெறிய வேண்டும். —அது இறைவன் வேலை. என் பங்கு யாது என விலக விரும்புகின்றீர்களா? உங்களைக் கிறிஸ்தவரென்று கூறினால் அது செத்தவரைத் துஞ்சினவரென உரைக்கும் சீர்மையை யொக்கும் (கிருஷ்ண பிள்ளை: இரட்சணிய யாத்ரீகம்) உங்கள் இதயங்களை உருக்குங்கள். முழந்தாளிட மறுக்கும் கால்களை மண்டியிடச் செய்யுங்கள். அமைதியாக இறைவனின் திருவருள் சூழ் நிலையில் அமருங்கள். போர் நிற்க இறைவனை வேண்டுங்கள்.

## பாவத்தை வெல்லும் ரகசியம்

பருந்தைக் காண்கையில் கோழிக் குஞ்சு தாயின் சிறைக்குள் ஓடிப் பதுங்குவதைப் பார்க்கிலும் தீவிரமாய் அவரண்டையில் பறந்து போ. அதிகாலையில் வீட்டினின்று வெளியேறு முன், அவருடைய கையில் உன்னைத் தீர்க்கமாய் ஒப்புவி. அவர், தம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதைக் காக்க வல்லவர் என்று நம்பு. அவர், தமது சிறகுகளால் உன்னை மூடுவார். அவர் செட்டைகளின் கீழ் அடைக்கலம் புகுவாய் என்ற நிச்சயத்தோடு போ. சோதனைக்காரன் வருகையில் உடனே, அண்ணாந்து பார்த்து 'இயேசு சுவாமி, நீர் என்னைக் காப்பீர் என்று நம்பிக்கொண்டிருக்கிறேன்' என்று சொல். இதுவே பவுல் சொல்லிய விசுவாசம் என்னும் கேடகம். அண்ணாந்த பார்வை, இயேசுவை, உனக்கும்- சோதனைக்கும் இடையில் ஒரு கேடகமாக வைக்கிறது. 'இயேசு சுவாமி, என்னை இரட்சியும்' என்று, நாள் ஒன்றுக்கு நூறு தரம் சொல்லலாம். தம்மை நம்புகிறவர்களை அவர், ஒருக்காலும் வெட்கப்படவொட்டார். 'வழுவாதபடி உங்களைக் காக்க அவர் வல்லவர்' (யூதா 24 வச). வெளியே சோதனைகள் உன்னை நெருக்கலாம், உள்ளே மாம்சம்,சூது பண்ணலாம். ஆகிலும் உன் சித்தம் இயேசு சுவாமியை நோக்கிப் பார்த்து, உறுதியாய் அசையாமல் கல்போல இருக்கும். உனக்கு விரோதமாய் நரகத்தில் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம்.

## உங்களுக்கு தெரியுமா?

ஒரு கண்டத்தையே கொண்டுள்ள நாடு: அவுஸ்திரேலியா.

உலகில் அதிக ராணுவத்தை வைத்திருக்கும் நாடு: சீனா. இராணுவமே இல்லாத நாடு: கோஸ்டா ரீக்கா.

லிவிங்ஸ்டன் நீர் வீழ்ச்சி என்பது: ஏழு உலக அதிசயங்களில் ஒன்று. ஸாம்பியாவில் உள்ளது.

உலகில் அதிகமான மழை மிகுந்த பிரதேசம்: இந்தியாவில் உள்ள சிரபுஞ்சிரி. ஆண்டுதோறும் 4040 அங்குல மழை.

**A Service to Thank God for the life and work of**

**DR. W. L. JEYASINGHAM**

will be held at the
**Cathedral Church Vaddukoddai**
on
Friday 9th February at 9.30 a.m.
Friends, Alumni
and
Parents are Cordially invited.

The Rev. Dr. S. Jebanesan,
Principal,
Jaffna College.

## At Rest:

We regret to inform the public of the sudden demise of Mr. Desmond Wijendran Thevathasan, beloved son of Mr. & Mrs. Thevathasan, brother of Thevaranjini (Norway), brother-in-law of Kesavan (Norway) and grandson of Mrs. N. Rajaratnam.

The funeral Service was conducted by the Rev A. Rajkumar and the tribute was paid by the Rev. Dev. Anandarajan. The committal rites were performed by the Rev. A. Rajkumar at the Chavakachcheri C.S.I. Cemetery on the 7th of January 1990.

## OBITUARY

Mr. W. M. S. Kingsbury, the well known retired Secretary of the Physical Department of the Colombo YMCA and later of the Tamil Union expired in his home at Usan on the evening of Wednesday the 10th of January. The funeral service took place at Usan on Saturday the 13th at 2.00 p,m. The service was conducted by the Rev. V. Rajkumar who also preached the sermon and later performed the committal rites. Tributes were paid by Mr. M. Thambithurai the General Secretary of the Jaffna YMCA and Mr. D. J. Ponnudurai the worker in charge of the Usan Church.

Mr. Thambithurai paid a glowing tribute to the qualities of Mr. Kingsbury and his dedication to the YMCA for more than three decades. Mr. Thambithurai said that if the funeral was held in Colombo there would have been a large and representative gathering of men from all walks of life and from all the communities in the city

Mr. Kingsbury held sway over the Sports activities of the city with great competence and also in later years published a magazine to popularise sports in the country. Reference was also made to the splendid heritage of Mr. Kingsbury who was the older son of the late Rev. Francis Kingsbury a professor of Theology at the United Theological College, Bangalore, an army Chaplain in Mesopotamia during the World War 1 and later Professor of Tamil at the University College, Colombo. Mr. Kingsbury was also the grandson of the Well known Tamil scholar and the first graduate of the Madras University Rao Bahadur C. W. Thamotharampillai, B.A.,B.L. A postage stamp honouring C. W. Thamotharampillai was issued by the government a few years ago.

M. Ponnudurai in his tribute referred to the great support Mr. Kingsbury gave to the Usan Church. While the church was being repaired the congregation met in Mr. Kingsbury's house for Sunday worship. He also referred to the generosity of Mr. Kingsbury in all matters connected with the church and his neighbours.

Mr. Kingsbury leaves behind his wife May (nee Rasiah), a brother Robert Kingsbury, brothers-in-law Sam, Albert and David Rasiahs & the late Stanley Rasiah and niece Mrs. Lila Solomon (nee Kadirgamar). His only sister Mrs Katherine Kadirgamar predeceased him in the early 1920s.

## Obituary.

### The Rev. Dr. A. E. Inbanathan

Death came suddenly due to a heart attack to Dr. Inbanathan at his home in Bangalore on the 12th of December, 1989. An outstanding Christian leader in India, best known for his service to the Bible Society of India as its General Secretary for 21 years from 1960 to 1981. During this period he was elected to high offices in the United Bible Societies as Vice Chairman in 1963, Chairman, General Committee in 1966, Chairman, Executive Committee in 1972 and Chairman of the World Council of the U B S in 1976.

Earlier in his career Dr. Inbanathan was Dean of Religious Work at the Christian Medcial College, Vellore from 1953 to 1960 during which period he was also Secretary of the Governing Council of C M C Vellore from 1956 — 1960. On his retirement he served for two years, 1983 — 1985 on the Faculty of the Tamilnadu Theological Seminary, Madurai. Dr. Inbanathan's death at the age of 69 removes from our midst an outstanding Christian leader, scholar and administrator who made a great contribution to the Christian cause in South Asia. He leaves behind his wife Gladys and two sons to bemoan his loss.

A service of Thanksgiving in his memory was held in the Memorial Church, Bangalore on Thursday the 18th of January 1990, presided by the Bishop of the Karnataka Central Diocese, the Rt. Rev. C. D. Jathana. Bishop Jesudasan of South Kerala preached the sermon while tributes were paid by the Rev. Dr. Dayanandan Francis, General Secretary, C L S Madras and the Rev. Anderson of T. T. S. Madurai.

## IN LOVING MEMORY OF



**Dr. SUBRAMANIAM JEYASEELAN**

Born 30 - 1 - 1942
Called Home 29-11-1989

"And God shall wipe away all tears from their eyes and there shall be no more death. neither sorrow, no crying; neither shall there be any more pain"

Inserted by his dearest "SEPAM, VIMALA and the Girls"

Vaddukoddai

**Extracts from...**
(contd. from page 1.)

During the Centenary Celebrations in honour of Rev. David Poor, we had a distinguished set of visitors here - Rev. Dhyanchand Carr from the Theological Seminary, Madurai, Mr. Kim Kyon from Seoul, South Korea, Dr. Preman Niles from the World Council of Churches, Geneva and Dr. S. Jebanesan, Principal of Jaffna College. We have a library that consists only of two simple rooms - used as reference and lending sections. Since this is to become the library for deeper theological and philosophical studies of students here as well as of all intellectuals in this part of the island, we need to build up a larger and up-to date library. The Seminary is built and maintained largely from the contributions of Catholics of older churches. We are conscious of the need to express at least in some small way our effort to become self-supporting.

As we enter into the tenth year of our existence, let us hope and pray that this year brings further growth so as to form and animate priests Worthy of their name. In conclusion, we thank the Lord for his merciful protection, guidance and strength through these difficult times.

*(Fr S. J. Emmanuel The Rector St. Franci's Xavier's Seminary Columbuthurai, Jaffna.)*

## MORNING STAR

We wish to inform our readers that due to rising costs and the increase in the pages of the Morning Star we have revised the annual subscription as follows:

| | | |
|---|---|---|
| **INLAND** | Rs. | 100-00 |
| **EUROPE, AUSTRALIA & MALAYSIA** (Air Mail) | Pounds | 10-00 **or Equivalent** |
| **U. S. & AFRICA** (Air Mail) | Dollars | 15-00 |
| **INDIA, PAKISTAN & BANGLADESH** (Air Mail) | Indian Rs. | 150-00 |

Registered as a Newspaper at the G. P. O. Sri Lanka under No. Q/J/104/89 News
Printed for the Jaffna Diocese of the Church of South India at American Ceylon Mission Press. 182,1st,Cross Street Jaffna on Friday, 26 January. 1990 and published by the Rev. T. THEVANESAN,182, First Cross Street, Jaffna